**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை :- திருமதி. K. பாரதி, M.L.,**

**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 24 ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.556/2021**
**(CNR.No. TNVP02-001338-2021)**

1. விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், ஆசூர் அஞ்சல், பொன்னங்குப்பம் கிராமம், திரௌபதி அம்மன் கோவில் தெரு,நெ 207/8 எ-ல் வசிக்கும் லேட் மொட்டையக்கவுண்டர் குமாரர் சுமார் 71 வயதுள்ள இலட்சுமணன்.
2. விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், ஆசூர் அஞ்சல், பொன்னங்குப்பம் கிராமம், அண்ணா நகரில் வசிக்கும் லேட் பற்குணன் அவர்களின் மனைவி சுமார் 55 வயதுள்ள பாஞ்சாலி.
3. விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், ஆசூர் அஞ்சல், பொன்னங்குப்பம் கிராமம், அண்ணா நகரில் வசிக்கும் லேட் பற்குணன் அவர்களின் குமாரர் சுமார் 36 வயதுள்ள ஆதிமுத்துவீரன்

...வாதிகள்

//எதிர்//

1. மன்னம்மாள் (இறந்துவிட்டார்) க/பெ. லேட். ராமநாதன் வயது 60
2. சிவக்குமார் த/பெ. லேட். ராமநாதன் வயது 50
3. கோபாலகிருஷ்ணன் த/பெ. லேட். ராமநாதன் வயது 43
4. வீரமணி த/பெ. லேட். ராமநாதன் வயது 40
5. வாமணமூர்த்தி த/பெ. லேட். ராமநாதன் வயது 35

1 முதல் 5 பிரதிவாதிகள் அனைவரும் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், ஆசூர் அஞ்சல், பொன்னங்குப்பம் கிராமம், திரௌபதி அம்மன் கோவில் தெருவில் வசிக்கிறார்கள்.

6. விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், சாரம் கிராமத்தில் வசிக்கும் லேட் ராமநாதன் குமாரத்தியும், விஜயரங்கம் அவர்களின் மனைவியுமான சுமார் 31 வயதுள்ள சமுத்திரவள்ளி.

...பிரதிவாதிகள்

இவ்வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு உண்டான 2/3 பாகத்தை பிரித்துக்கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், பிரதிவாதிகள் வாதிகளுக்கு உண்டான பாகத்தை பிரித்துக்கொடுக்க மறுத்தால் ஆணையரை நியமித்து நில இளப்பம் கட்டி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், (1) 1 ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதி பெயருக்கு விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.2551/2020 மூலம் 14.09.2020 ம் தேதியில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம், (2) 1 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதி பெயருக்கு விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.2552/2020 மூலம் 14.09.2020 ம் தேதியில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம், (3) 1 ம் பிரதிவாதி, 4 ம் பிரதிவாதி பெயருக்கு விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.2553/2020 மூலம் 14.09.2020 ம் தேதியில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம், (4) 1 ம் பிரதிவாதி, 5 ம் பிரதிவாதி பெயருக்கு விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.2554/2020 மூலம் 14.09.2020 ம் தேதியில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம், ஆகியவை சட்டப்படி இல்லா நிலையது என்று விளம்புகை செய்யக்கோரியும், மற்றும் செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல்.

இத்தாவா 24.11.2021 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாவின் மொத்த மதிப்பு ரூ.14,17,423/-ல் வாதியின் 2/3 பாக மதிப்பு ரூ.9,31,616/-+ரூ.5000/- +ரூ.5000/-+ரூ.50000/- ஆக மொத்தம் ரூ.9,51,616/-க்கு தமிழ்நாடு நீதிமன்றக்கட்டணச் சட்டம் பிரிவு 37(2) க்கு ரூ.5000/-மும், 25(d)க்கு ரூ.150/-ம்,

25(d)க்கு ரூ.150/-ம், 25(d)க்கு ரூ.150/-ம், 25(d)க்கு ரூ.150/-ம் ஆக மொத்தம் ரூ.5,600/- செலுத்தப்பட்டுள்ளது.

இத்தாவா 07.12.1957, 25.07.1959, 14.07.2021, 16.07.2021, 17.07.2021, 28.07.2021, 09.08.2021 மற்றும் 10.08.2021 ஆகிய தேதிகளில் விக்கிரவாண்டி வட்டம், பொன்னங்குப்பம் கிராமத்தில் வியாஜ்ஜியமூலம் உற்பத்தி.

இவ்வழக்கு 24.11.2021 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 16.06.2026 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சி.கே.தேசிங்குராஜா, அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.எ.நாராயணசாமி, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..........

**<u>தீர்ப்பாணை</u>**

(1) முடிவாக, தாவா 1, 2, 8, 9 இனச்சொத்துக்களைப்பொறுத்து இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

(2) 3 முதல் 7 வரையிலான இனச்சொத்துக்களில் 1ம் வாதிக்கு 6/36 பங்கும், 2,3 வாதிகளுக்கு பொதுவாக 6/36 பங்கும் கிடைக்கத்தக்கது என உத்தரவிடப்படுகிறது.

(3) 10 முதல் 12 வரையிலான இனச்சொத்துக்களில் 1ம் வாதிக்கு 1/3 பங்கும், 2, 3 வாதிகளுக்கு பொதுவாக 1/3 பங்கும் கிடைக்கத்தக்கது என

பாகப்பிரிவினை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

(4) தாவா 3 முதல் 7 மற்றும் 10 முதல் 12 இனச்சொத்துக்களில் வாதிகளின் பாகத்தைப்பொறுத்து 1ம் பிரதிவாதியானவர், 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்தியுள்ள செட்டில்மெண்ட் ஆவணங்கள் (ஆவண எண்கள் 2551/2020, 2553/2020, 2553/2020, 2554/2020) இல்லா நிலையது என்று விளம்புகை செய்து உத்தரவிடப்படுகிறது.

(5) தரப்பினர்களின் உறவுமுறை கருதி செலவுத்தொகை இல்லை.

(6) (பிரதிவாதிகளின் செலவுத்தொகை ரூ.25,010/-)

**செலவுத்தொகை பட்டியல்**

| | வாதி தரப்பு | பிரதிவாதிகள் தரப்பு ரூ. பை. |
|---|---|---|
| நீதிமன்றக்கட்டணம் | | == |
| வக்காலத்து | தாக்கல் இல்லை | 10.00 |
| சீனியர் வழக்கறிஞர் ஊதியம் | | 20,000.00 |
| ஜுனியர் வழக்கறிஞர் ஊதியம் | | 5,000.00 |
| **மொத்தம்** | | 25,010.00 |

## சொத்து விபரம்

விழுப்புரம் ரி.டி., விக்கிரவாண்டி சப்.டி., விக்கிரவாண்டி வட்டம், ஆசூர் தெற்கு, பொன்னங்குப்பம் கிராமத்தில்,

1. அயன் புஞ்சை சர்வே எண்.133/3 - 0.11 செண்ட்
   
   மேற்படி சர்வே எண்ணில் உள்ள கிணறு மற்றும் 2 எச்.பி. மோட்டார் சர்வீஸ் எஸ்.சி.32 டெப்பாசிட் உள்பட வழிகாட்டி மதிப்பு ரூ.28,743/-.
2. அயன் புஞ்சை சர்வே எண்.133/4 - 1.67 (1 ஏக்கர் 67 செண்ட்) வழிகாட்டி மதிப்பு ரூ.4,36,371/-.
3. அயன் நஞ்சை சர்வே எண்.35/11 எ - 0.47 செண்ட் வழிகாட்டி மதிப்பு ரூ.1,07,066/-.
4. அயன் நஞ்சை சர்வே எண்.34/10 பி - 0.35 செண்ட் வழிகாட்டி மதிப்பு ரூ.79,730/-.
5. அயன் நஞ்சை சர்வே எண்.34/10 சி - 0.40 செண்ட் வழிகாட்டி மதிப்பு ரூ.91,120/-.
6. அயன் நஞ்சை சர்வே எண்.35/9 - 0.50 செண்ட் வழிகாட்டி மதிப்பு ரூ.1,13,900/-.
7. அயன் புஞ்சை சர்வே எண்.39/7 பி - 0.23 செண்ட் வழிகாட்டி மதிப்பு ரூ.60,099/-.
8. அயன் நஞ்சை சர்வே எண்.35/3 - 0.39 செண்ட் வழிகாட்டி மதிப்பு ரூ.88,842/-.
9. அயன் நஞ்சை சர்வே எண்.34/9 - 0.84 செண்ட் வழிகாட்டி மதிப்பு ரூ.1,91,352/-.
10. நத்தம் சர்வே எண்.112/12 எ 0.84 சதுரமீட்டர் மதிப்பு ரூ.54,600/-
11. நத்தம் சர்வே எண்.120/2 0.91 சதுரமீட்டர் மதிப்பு ரூ.59,150/-

12. நத்தம் சர்வே எண்.132/2 133 சதுரமீட்டர் மதிப்பு ரூ.86,450/-

தாவா சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.13,97,423/-

வாதிகளின் 2/3 பாக மதிப்பு ரூ.9,31,616/-.

2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 24ம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இட்டுத்தரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.07.22 17:36:50 +0530

முதன்மை சார்பு நீதிபதி,

விழுப்புரம்.